
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 1 | மே 1988 | இதழ் 5

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

# THIRUMARAI AASAAN

Editor:
J. C. CHOATE

Managing Editor:
E. Z. SELVANAYAGAM

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu. India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 1 May 1988 Issue 5

## இதழின் உள்ளே

உண்மைத் தன்மையின் பொருள் விளக்கம் 1

மனிதர்களே, நமக்கு இந்தத் தொழிலினால் நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறது என்று அறிவீர்கள்! 6

கள்ளப் போதகர்கள் 10

நமது பெலன் கர்த்தரே! 15

கிறிஸ்துவின் சபை என்பதும் இராஜ்ஜியம் என்பதும் ஒன்று தான் 18

ஒருவன் கிறிஸ்தவனாகும் போது ஏற்படும் மாற்றம் என்ன? 20

கிறிஸ்தவ ஈகை 24

ஆசிரியவுரை

# உண்மைத் தன்மையின் பொருள் விளக்கம்

கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றி நாம் சிந்திக்கும் பொழுது 'பளிச்' என்று நம் நினைவுக்கு வருவது உண்மை அர்ப்பணிப்புத் தன்மைதான் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். மற்றபடி பிசாசு துரத்தல், தெய்விக சுகம் அளித்தல் அல்லது அந்நிய பாஷையில் பேசியே தீர வேண்டும் என்பதெல்லாம் மனிதனுடைய இடைச் செருகல்; தேவன் இவைகளையெல்லாம் எதிர்ப்பார்ப்பதில்லை.

ஆனால் உண்மைத் தன்மை என்றால் என்ன? அதில் சம்பந்தப் பட்டுள்ள உயரிய குணநலன்கள் யாது? அதனுடைய நுட்பங்களை உண்மையாகவே நாம் புரிந்துகொண்டிருக்கிறோமா? அதை செயல் படுத்துகிற விஷயத்தில் நாம் எந்த மட்டும் அக்கறை காட்டுகிறோம்? என்பனவற்றை சிந்தித்துப் பார்ப்போம்.

உண்மைத் தன்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு சில வாழ்க்கைப் பிரச்சனைகளை அலசிப் பார்ப்போம். உதாரணமாக ஒருவனைப்பார்த்து, 'இவன் உண்மையுள்ள ஆள்' என்று நாம் கூறும்போது, அவனிடத்தில் நாம் எதிர்பார்க்கிற தன்மைகள் என்னென்ன? அவனிடத்தில் ஒரு வேலை சொன்னால் முறுமுறுக்காமல் தன்னால் முடிந்த அளவு செய்ய முயற்சிப்பான். ஒரு வேலையில் அமர்ந்து விட்டால் கஷ்டமோ நஷ்டமோ தொடர்ந்து நிலைத்திருப்பான். அவனை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்கலாம். காசு விஷயத்தில் கறார்; கணக்கு வழக்கு சுத்தம்; திருட்டுப் புரட்டு என்பவைகள் இருக்காது.

அடுத்து, ஒரு மணமான பெண்ணைப் பார்த்து "இவள் உண்மையுள்ள மனைவி" என்று எப்பொழுது கூறுகிறோம்? இருந்தாலும், இல்லாவிட்டாலும் தன் வீட்டுக் காரியங்களைப் பற்றி மற்றவர்களிடத்தில் மட்டமாக விமர்சிக்க மாட்டாள். நடத்தை தவறாதவள். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று கணவனை மதித்து அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவள். கணவன் புத்தி தடுமாறி தகாதவைகளைச் செய்தாலும், பேசினாலும், பொறுமையாக நீதி நெறிக்கும், சமுதாயக் கட்டுப்பாட்டுக்கும் அஞ்சி நடப்பவள் என்ற நிலையைப் பார்த்துத்தானே,

வேறொருவனைப் பார்த்து, அவன் நாணயஸ்தன், உண்மை உடையவன் என்று எப்போது சொல்லுகிறோம்? தன் கையேந்தி வாங்கிய கடனை நாணயமாகக் கட்டித் தீர்ப்பவனைக் கண்டாலும், அல்லது கட்ட முடியாவிட்டாலும், பணிவுடன் தன்னுடைய இயலாமையைப் பக்குவமாய் எடுத்துக்கூறி தவணை கேட்பவனை உண்மைத்

தன்மையுடையவன். யோக்கியன் என்று பாராட்டுகிறோம்.

அதே, போன்று தன்னுடைய பாடங்களைக் கவனமாகப் படித்து' ஆசிரியர் கொடுக்கும் வீட்டுப் பாடங்களை ஒழுங்காகச் செய்து பள்ளி நேரங்களில் வகுப்புக்குச் செல்லாமல் 'கட்' அடித்துக்கொண்டு ஊர் சுற்றாமல், ஒழுங்காய் நடக்கிற மாணவனைப் பார்த்து ஒழுக்கமான உண்மையுள்ள மாணவன் என்று மெச்சிக் கொள்கிறோம்.

அதே போன்று விளையாட்டு அல்லது வேறு எந்தத் துறையிலும் சரி, தாங்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்பு அல்லது பணியில் உச்ச நிலையை எய்த வேண்டும் என்ற குறிக்கோளோடு உண்மையோடும், ஆர்வத்தோடும் பாடுபடுபவர்களை உண்மையுடையவர்கள் என்று மக்கள் பாராட்டுவர்; அவர்களை மதிப்பர்.

அதே விதமான அளவுகோல் கொண்டு தான் ஆன்மீக காரியங்களையும் அளந்து பார்க்க வேண்டும்· அப்படி அளந்து பார்த்தால் இன்றைக்கு மாபெரும் போதகர், புகழ் பெற்ற பக்திமான்; நாடு போற்றும் நாவலர், வரங்கள் பல பெற்ற வல்லவர் என்று விளம்பரம் பெற்றவர்கள் எல்லாம்' தெக்கேல்' ஆகி விடுவார்கள். தானி. 5:27.

**ஆம், அருமைச் சகோதரனே சகோதரியே!**

கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்வதற்கும் உண்மையாகவே கிறிஸ்தவ அறத்தைப் பேணி சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. ஒருவன் கிறிஸ்தவன் என்று பெயர் தரித்துக்கொண்டு, தன் மன நிலையில் மாற்றம் செய்து கொள்ளாமல் கிறிஸ்தவ அறம் கூறும் வழியில் நடைபோட முயற்சிக்காமல், உண்மைக் கிறிஸ்தவர்களுக்கு ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் நித்திய ஜீவனையும், மோட்சானந்த பாக்கியத்தையும் பெற்றுக் கொள்ளும் முயற்சி ஒன்றும் செய்யாமல் இருந்தால் அவனை உண்மைக் கிறிஸ்தவன் என்று மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?

இது விஷயத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், மெய் தேவனாகிய பிதாவும் நமக்குச் சிறந்த வழிகாட்டிகள். அவர்கள் தங்கள் உண்மைத் தன்மைகளைப் பல நிலைகளிலும் செய்துகாட்டி நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார்கள். முதலாவது தேவன் எவ்வாறு தம்முடைய உண்மைத் தன்மையை வெளிப்படுத்துகிறார். என்று பார்க்கலாம். 2 தீமோ. 2:13-ல் மானிடராகிய நாம் அநேக காரியங்களிலும், சமயங்களிலும் நம்முடைய உண்மைத் தன்மையைக் காத்துக்கொள்ளத் தவறிவிட்டாலும், தேவனைப் பொறுத்த வரையில் உண்மையுள்ளவராகவே இருக்கிறார் என்று பவுலடியார் கூறுகிறார். அதாவது நாம் அவரோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறி மதித்துக் காப்பாற்றத் தவறிவிட்டாலும், அவரைப் பொறுத்த வரையில் தன்னுடைய தெய்வத் தன்மைக்குப் பங்கம் விளையாதபடி தன்னுடைய வாக்குறுதியை மாற்றாமலும், செய்வேன் என்று

சொன்னதைச் செய்து காட்டியும் நமக்கு நல்ல மாதிரியைக் காண்பித்-துள்ளார். இப்படிப்பட்ட பொய்யுரையாத தன்மை, வாக்கு மாறாத நேர்மை ஆகிய உயர்ந்த பண்புகளை மனதில் எண்ணி நாம் பயமும், சந்தேகமுமின்றி அவருடைய சொல்லை நம்பி, கீழ்ப்படிந்து நடக்க நாம் ஏவப்படுகிறோம். எபி. 10:23-ல் ''அல்லாமலும் நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாக இருக்கக் கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரா-யிருக்கிறாரே'' என்று தேவனை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தா என்று நற்சாட்சி பகர்கிறார். 1 பேது. 4:19.

இரண்டாவதாக நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து உண்மை தன்மையுள்ளவர் என்பதைக் கூட பார்ப்போம். இயேசு, தேவனுக்குச் சமமாக விண்ணுலகில் வீற்றிருந்தார். அங்கிருந்து, மானிடர் பாவத்தில் அமிழ்ந்து அழிவதைத் தடுத்து இரட்சிப்பதற்-காக இம் மண்ணுலகுக்கு வந்து ஏழையாக வாழ்ந்தார். பிலி. 2:6-8. தன் உயிரைத் தியாகம் செய்து தமது விலைமதியாத இரத்தத்தினால் மானிடரை மீட்டுக்கொண்டார். 1 யோவான். 1:9. அப்போஸ்தலன் பேதுரு இதைப்பற்றிக் கூறும்போது, ''தான் கொடுத்த வாக்குறுதியைப் பற்றி மெத்தனமாயிராமல்'' ...... என்கிறார் 2 பேது. 3:9. உலக முடிவு பரியந்தம் நம்மோடு இருப்பதாகக் கூறியிருக்கிறார். மத். 28:20. சோதனை நேரங்களில் கூட அவர் நம்மைக் கைவிடாமல் நமக்கு ஒத்-தாசை செய்கிறார் என்கிறார் எபிரேய நிருப ஆசிரியர். எபி. 4:14-16. வரை உள்ள வசனப் பகுதியில், நமக்கு ஒரு பிரதான ஆசாரியர் இருக்கிற படியால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம். அப்பிரதான ஆசாரியருக்கு நம்முடைய பலவீனங்கள் பற்றித் தெரியும் என்றும் கூறுகிறார். ஏனெனில் அவர் இந்த பூலோக வாழ்க்கையின்போது, எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், அச் சோதனைகளால் விழுந்து போகாமல் பாவம் செய்யாதவராக தன்னைக் காத்துக் கொண்டார்'' என்கிறது. ஆகவே நாம் இரக்கத்தைப் பெறவும், தக்க சமயத்தில் அவரிடமிருந்து நமக்குத் தேவையான ஆலோசனைகள், சகாயங்கள், கிருபைகளைப் பெறவும், நம்பிக்கையோடும், தைரியத்தோடும் அவருடைய கிருபா-சனத் தண்டைக்குச் சேரக்கடவோம், என்று தைரியம் கொடுக்கிறார்.

அப்போஸ்தலன் யோவான் இக்கூற்றை உறுதிசெய்யும் வகை-யில் 'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்தி-கரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராக இருக்கிறார் என்று தனது முதலாம் நிருபத்தில் குறிப்பிடுகிறார். 1 யோவான். 1:9. ஆகவே வாழ்க்கையின் எந்தக் கோணத்தில் எடுத்துக் கொண்டாலும் அவர் தமது உண்மையுள்ள தன்மையைப் போற்றிப் பாதுகாத்தார் என்று அறியலாம்.

மேற்சொன்ன காரியங்களை உற்று நோக்கும்போது பிதாவும், குமாரரும் தங்கள் வாக்குறுதிகளைக் காத்துக்கொள்வதில் உண்மையுள்ளவர்களாயிருப்பது தெளிவாகிறது. அப்படியானால் அவரை விசுவாசிக்கிற அவருடைய மக்களும், பிதாவைவயும், கிறிஸ்துவையும் போலவே உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று எதிர்ப்பார்ப்பதில் நியாயம் இருக்கிறது என்பது விளங்கும். அந்த நிலைமைத்தான் 'புத்தியுள்ள ஆராதனை' என்று பவுல் வர்ணிக்கிறார். ரோமர் 12:1,2.

உண்மையுள்ளவன் என்பதற்குரிய விளக்கம் யாதெனில், நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். அவனை நம்பி எதையும் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக இருக்கலாம். அவன் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவான். பேச்சில் மட்டுமல்ல செயலிலும் காட்டுவான். என்று பொருள்படும். கர்த்தருக்குள் நீங்கள் படும் பிரயாசம் விருவதாயிராது என்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிருபையிலே எப்போதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக என்று பவுல் உற்சாகப்படுத்துகிறார். 1 கொரி. 15:58. உண்மையுள்ளவன் என்று சொல்லும்போது கீழ்ப்படிதலும், அதில் அடக்கம், அவன் கர்த்தருடைய அதிகாரத்தை மதிப்பவன். அவன் சொல்லாலும், செயலாலும் கிறிஸ்துவை முன் வைத்து வாழ்பவன். மத். 6:33. அவன் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு அதன்படி செய்பவன். யாக். 1:22. உண்மையுள்ள ஒருவன் தான் கேட்டதை விசுவாசித்துக் கீழ்ப்படிந்து எந்தச் சூழ்நிலையிலும், காலமெல்லாம் கர்த்தரைச் சேவித்து வாழ்வான். வெளிப்படுத்தின விசேஷத்தில் அப்போஸ்தலன் யோவான் எச்சரித்துப் புத்தி சொல்வதைக் கவனியுங்கள். 'நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே. இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான். பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன். வெளி. 2:10.

உண்மையுள்ள தன்மை ஒருவனை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும். வாடாத ஜீவ கிரீடத்தைப் பெற்றுத் தரும். அப்போஸ்தலன் யாக்கோபு இதைப்பற்றிக் கூறுவதை கவனிப்போம். 'சோதனைகளைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் அவரிடத்தில் அன்பு கூறுபவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான். யாக். 1:12.

மேலே சொன்ன வெகுமதிகள் மட்டுமல்ல உண்மையுள்ள தன்மைக்குக் கிடைக்கும் முடிவான வெகுமதிகள் ஏட்டில் அடங்கா. தொண்டுள்ளம் கொண்ட வாழ்க்கை-கொடுப்பதில் மகிழ்ச்சி-கிறிஸ்தவ அறம் தரும் மனப்பக்குவம்-நற்பணிகளைச் செய்யத் தூண்டும் தூய

உள்ளம்-இலட்சியப்பற்று-கிறிஸ்துவுக்குள் புது வாழ்வு-கிறிஸ்தவரோடு ஐக்கியம்-கிறிஸ்துவின் ஆவியைப் பெற்று கிறிஸ்துவைப்போல வாழ வேண்டும் என்ற பேரவா. இத்யாதி...இத்யாதி.

அருமை நண்பரே! நீர் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குக் கீழ்ப் படிந்திருக்கிறீரா? ஆம் என்றால் அடுத்த கேள்வி. அவரைப் பின்பற்றும் உண்மைத் தொண்டனாக வாழ்கிறீரா? உமது விசுவாசத்தின் நம்பி சாத்தானுக்கு சவால் விடலாமா? என்ன இடறல்கள் வந்தாலும், வாழ்நாள் எல்லாம் அவரை நேசித்துப் பின்பற்றுவீரா?

அப்படியானால், தம்மை உண்மை மனதுடன் பின்பற்றுகிறவர் களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருக்கும் பரம வாசஸ்தலத்தில் உமக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது நிச்சயம். அங்கே நீர் அவருடனே சதாகாலங்களிலும் ஆனந்தமாக வாழ்ந்து சுகிக்கலாம்.

இல்லை எனில், இன்றே இப்பொழுதே நீர் அவருடைய சுவிசேஷத்-திற்குக் கீழ்ப்படிந்து அவரால் கிடைக்கும் ஆனந்த பாக்கியத்தை-யெல்லாம் பெற்றுக்கொள்ள விரைந்து வாரும்.

J. C. சோட்

**-தினமும் ஒருமலை வாழைப் பழம் தின்று உங்கள் உடல் வளர்ச்சியை கவனியுங்கள்-**
**ஒரு மலை வாழைப்பழ வியாபாரியின் விளம்பரம்**

அவர் கூற்றில் உண்மை உளது, நோய்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் மலச்சிக்கல். மலைப்பழம் உண்பதால் மலச்சிக்கல் மறையும். உடல் வளம் பெறும். அதுபோல்.

மனநோய்கட்கு பாவமே அடிப்படை. பாவம் நீங்க தினமும் வேதம் படியுங்கள். குடும்பமாய் இறைவனிடம் வேதத்தின்வழி மன்றாடுங்கள். அப்பொழுது பாவம் நீங்கி ஆன்மா வளம் பெறும்.

### அப்போஸ்தலர் 19 : 25.....

## மனிதர்களே, நமக்கு இந்தத் தொழிலினால் நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறது என்று அறிவீர்கள்!

மக்களுடைய அறியாமை, அக்கறையின்மை, மூட நம்பிக்கை, மதவெறி ஆகியவைகளைச் சில சுய நலமிகள் தங்களுடைய நலனை பாதுகாத்துக்கொள்வதற்கும், வசதியைப் பெருக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதை நாம் காண்கிறோம். இது இன்றைக்கு மட்டும் அல்ல; பன்னெடு நாட்களாகவே நடந்து வருகிற தொடர் மோசடி என்றும் தெரிகிறது. சிலர் வீட்டிலே செத்துப்போன எலிகளைக் கொண்டுவந்து வீதியிலே போட்டுவிட்டு, 'துர்நாற்றம்' தாங்கமுடிய வில்லை. பார்த்துக்கொண்டு நிற்கிறீர்களே, ஏதாவது செய்யுங்களேன்; என்று ஊரைக் கூப்பிட்டு ஓலம் இடுவார்கள். மக்கள் நடந்தது தெரியாமல் எலியை அப்புறப்படுத்தத் தொல்லைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். பிரச்னையை உருவாக்கினவர் வேடிக்கை பார்த்துக்கொண்டு அவர்கள் படுகிற அவஸ்தையை ரசித்துக்கொண்டிருப்பார். அப்படிப் பட்ட இனத்தைச் சேர்ந்த இந்த சுயநலக் கும்பல் மக்களுடைய நன்மைக்காகவே வாழ்பவர்கள் போன்று காட்டிக்கொள்வார்கள். ஆனால். உண்மை என்னவென்று கூர்ந்து கவனித்தால் இவர்கள் தங்களுடைய பேருக்கும், புகழுக்கும், செல்வாக்குக்கும் வாழ்க்கை வசதிக்கும் கேடு நேரா வண்ணம் காத்துக்கொள்வதற்காகவே பிரச்னைகளை உருவாக்கி, மக்களுடைய உணர்ச்சிகளில் நஞ்சைப் பாயவிட்டு, அவர்களுடைய நரம்புகளில் முறுக்கேற்றி ஏழை, எளிய மக்களின் மேம்பாடும் நல்வாழ்க்கையுமே தங்களுடைய வாழ்க்கை இலட்சியம் என்று நம்பும்படி கூச்சலிடுவர். விவரம் தெரியாத மக்கள் கூட்டமும் அவர்களுடைய கபட நாடகத்தை அறிந்து கொள்ளும் ஆற்றல் அற்று, அவர்கள் ஆட்டுவிக்கிறபடி எல்லாம் ஆடி வம்பில் மாட்டிக்கொள்வர். பின்னர் வருத்தப்படுவர்.

மக்களை மயக்கும் கலையில் கைதேர்ந்த இந்த சூழ்ச்சிக்காரர்களின் சூது மதியால் திசைமாறிய வரலாற்று நிகழ்ச்சிகள் ஏராளம். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தையே எடுத்துக்கொள்ளுங்களேன். மரண நாளுக்கு சுமார் ஐந்து நாட்களுக்கு முன்னர் நடந்த குருத்தோலைத் திருநாளில் மக்கள் கூட்டத்தினர் போட்ட ஆர்ப்பாட்ட ஒலி விண்ணைப் பிளந்தது. உற்சாக மிகுதியினால் சிலர் தங்கள் மேல் அங்கிகளையும், உருமால்களையும் அவர் சவாரி வந்த சாலை நெடுக விரித்தார்கள். இன்னும் வேகமுள்ள இளைஞர்கள் மரக் கிளைகளில் ஏறித் தழைதாம்புகளை ஒடித்து வழி நெடுகப் போட்டு தங்கள் உற்சாகத்தைக் காட்டினார்கள். முன் நடப்பாரும். பின் நடப்பாரும் ஓசன்னாப் பாடி

மகிழ்ந்தார்கள் எண்ணி ஒரு வாரம் முடியவில்லை. அதே மக்கள் திரள். பிலாத்துவின் அரண்மனையைச் சுற்றி வளைத்துக்கொண்டு இவனை அகற்றும், சிலுவையில் அறையும், அறையும் என்று கூக்குரலிட்டார்கள்.

அந்தத் திடீர் மாற்றத்திற்கு என்ன காரணம்? இயேசுவின் புகழ் பரவுவதைக் கண்டு எரிச்சலும் பொறாமையும் அடைந்த வேதபாரகர் பரிசேயர், பிரதான ஆசாரியக் கும்பலும் பொய்யான பல குற்றச் சாட்டுகளை மக்கள் மத்தியில் பரவ விட்டு, மோசேயின் நியாயப் பிரமாணத்தைப் பற்றியும், ஆலயத்தைப் பற்றியும், ஓய்வு நாள் ஆசாரிப்புப்பற்றியும், இயேசுவின் கருத்துக்கள் தவறானவை என்று மக்கள் மத்தியில் எதிர்ப்பு உணர்ச்சிகளை விதைத்து விட்டனர். மக்கள் கூட்டமும், சாவி கொடுத்த பொம்மைகளைப் போலக் கத்தித் தீர்த்தனர். சூழ்ச்சி தற்காலிக வெற்றி பெற்றது.

புதிய ஏற்பாட்டின் அடுத்து சில பக்கங்களைப் புரட்டினால் எபேசு பட்டணத்தில் அப்போஸ்தலன் பவுல் சந்தித்த பயங்கரமான நிகழ்ச்சியொன்றை அப்போஸ்தலர் நடபடிகள் 19 ஆம் அதிகாரத்தில் வாசிக்கலாம். தட்டான் ஒருவன். பெயர் திமேத்திரியு. தியானாள் என்ற தேவதையின் கோவிலைப் போன்று சிறு, சிறுகோவில்களை வெள்ளியினால் உண்டு பண்ணி, விற்பனை செய்து பெரும் லாபம் சம்பாதித்துக் கொண்டு வந்தான். அவனைப் போல வேறு சிலரும் இவ்வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் தியானாள் தேவதையை ஒரு தெய்வமாக மதித்து வழிபட்டார்களா? என்பதைப் பற்றியெல்லாம் ஒன்றும் சொல்லப்படவில்லை. அந்தத் தேவதையைத் தொழுகிற மக்களுக்கும் இந்தத் தொழிலாளிக்கும் எவ்விதமான ஐக்கியமோ, வேறு எவ்வித மான ஈடுபாடோ இருந்ததாகவும் தெரியவில்லை. ஆனால் அந்தச் சிலை விற்பனையில் நல்ல சம்பாத்யம் இருந்தது என்பது மட்டும் தெரிகிறது.

அப்போஸ்தலன் பவுலாரின் மூன்று ஆண்டு கடும் உழைப்பு பெரும் வெற்றிகளைக் குவிக்கத் தொடங்கிய நேரம் அது. பிரபல மந்திரவாதிகள் கூட தங்கள் மனமாற்றத்தைக் குறிக்கும் வகையில் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமான சுவடிகளை எரித்துத்தங்கள் விசுவாசத்தின் உறுதியைப் பொதுமக்களுக்குப் பறைசாற்றினர். கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்தது. அநேக மக்கள் சத்தியத்தை அறிந்ததினாலே மூட நம்பிக்கை குறைந்ததும், மனிதர்களால் கற்பனை செய்யப்பட்டதுமான கட்டுக் கதைகளையும் அதை அடிப்படையாகக் கொண்ட மதங்களையும், அவைகளின் விபரீதமான கற்பனையால் உருவாக்கப்பட்ட கடவுள்களையும் அவைகளை வைத்துக்கொண்டு பிழைப்பு நடத்தும் பேர்வழிகளையும் மக்கள் வெறுத்து ஒதுக்கிவந்தனர். அதன் விளைவாக சிலை விற்பனை குறைந்தது சற்றேறக் குறைய மூன்று ஆண்டு காலமாக பவுல் வீடுகளிலும், பொது இடங்களிலும் பிரசங்கித்து வந்தார். அப்பொழுதெல்லாம் இது என்ன, ஏது என்று இந்தக் கூட்டம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தப்

புதிய மார்க்கம் சொல்லுகிற காரியங்களில் உண்மை இருக்கிறதா? இது நம் முன்னோடைய கலாச்சாரத்துக்கும், பண்பாட்டிற்கும் ஏற்றதா? இந்த மார்க்கம் கூறுகிற வழியில் சென்றால் நித்திய ஜீவன் கிடைக்குமா? என்பதைப் பற்றியெல்லாம் எப்பொழுதாவது சிந்தித்திருப்பார்களா? என்றால் இல்லை என்றே கூறலாம். அல்லது இதற்கு முன்னதாக தியானுளின் மேல் மக்களுக்கு உள்ள பக்தி நிலையை மேம்படுத்துவதற்கு உருப்படியாக ஏதேனும் செய்தார்களா? நிச்சயமாக இல்லை. பின் இந்தத் திடீர் பக்திக்கும், ஆர்ப்பாட்டத்திற்கும் காட்டத்திற்கும் கூக்குரலுக்கும் என்ன அடிப்படை என்று கவனித்தால் அந்தக் கும்பலின் தலைவனே கூறுகிறமாதிரி ''மனுஷர்களே இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறது'' என்பதே பதிலாகும்.

ஆம் சகோதரர்களே, அவர்களுடைய கோபத்துக்கும் கொக்கரிப்புக்கும், எதிர்ப்புக்கும் சித்தாந்த அடிப்படையோ தத்துவார்த்த முரண்பாடுகளோ அன்றி கருத்து வேறுபாடுகளோ காரணங்கள் அன்று. அவர்களுடைய சொந்த வாழ்க்கை வசதிகள் குறைந்து போயின. அவர்களுடைய முக்கியத்துவம் தேய்பிறை போன்று மங்கி மறைந்து கொண்டு வந்தது. அவர்கள் அனுபவித்து வந்த ஏகபோக உரிமைகளுக்கு ஆபத்து வந்து விட்டது. இதுதான் உண்மைநிலை. ஆனால் அந்தக் காரணங்களைச் சொன்னால் மக்கள் ஆதரவைபெற முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே அவர்களின் சிந்தனை சிறகடித்துப் பறந்தது; திட்டம் உருவானது. தியானுளின்மேல் மக்களுக்கு இருக்கிற மூடபக்தியை மூலதனமாக வைத்து ஏதும் அறியாத அப்பாவி மக்களைத் தூண்டிவிட்டு. கலகமூட்டி சத்தியத்தின் வெற்றியைச் சீர்குலைக்க முயற்சி செய்தார்கள். மக்களும் உண்மையறியாமல், உலுத்தர்கள் விரித்த வலையில் சிக்கி என்ன செய்கிறோம் என்றுகூட சிந்திக்காமல் கலகத்தில் பங்கேற்றனர். வேதம் அவர்களைப் பற்றி ''தாங்கள் கூடிவந்த காரணம் இன்னதென்று கூட அனேகருக்குத் தெரியாதிருந்தது'' என்று ஒற்றைவரி விமரிசனம் செய்கிறது மக்கள் தங்களுக்குத் தாங்களே சிந்திக்க மறுக்கும் வரையிலும் இவ்விதமான அசம்பாவிதங்கள் குறைவதற்கு வாய்ப்பே இல்லை. இன்றைக்கும் மதத்தின் பெயராலும், கடவுள் பெயராலும் நடக்கும் அநீதிகளை கயமையை ஆதாரமற்ற மூட நம்பிக்கைகளை எடுத்துக் காட்டி, இது வேதத்துக்குப் புறம்பானது, தேவனுடைய அங்கீகாரம் பெருத புளுகு, சுய நலமிகளாலும் தெய்வ பயமற்றவர்களாலும் சேர்க்கப்பட்ட இடைச்செருகல், ஆதி அப்போஸ்தலர்களால் போதிக்கப்படாதது, ஆதித் திருச்சபை அனுஷ்டிக்காதது என்று சத்தியவேதத்தின் பக்கங்களைப் புரட்டி ஆதாரம் காட்டினால் ஒரு சில அசைவுகளை ஆங்காங்கே காண்கிறோம். ஆனால் மக்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். ''காரியங்கள் இப்படி இருக்கிறதா ''என்று வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள்'' அப் 17 : 11 ''எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமான

தைப் பிடித்துக் கொள்ள'' 1 தெச. 5 : 21 முயலுகிறார்கள் என்று செய்தி எட்டியவுடன் சீறுகிறார்கள், கட்டுப்பாடு விதிக்கிறார்கள், யோக்கியதைகளைப் பற்றி வினா எழுப்புகிறார்கள், கூட்டம் கூடுகிறார்கள், கமிட்டி போடுகிறார்கள்.

பாவம்! ஆத்திரம் அவர்களின் அறிவை மழுங்கச் செய்கிறதினால் வரலாறு தரும் உண்மையை மறந்துவிட்டனர். சத்தியத்தை அணை போட்டுத் தடுத்துவிட முடியும் என்று நினைத்த திமேத்திரியு அழிந்தான். அந்தக் கும்பலும் ஒழிந்தது. எந்த தியானாளுக்கு வக்காலத்து வாங்கினார்களோ, அந்த தேவதையும் அழிந்தாள். அந்தக் கொடுமையைத் தாங்கி நின்ற கோவிலும் பாழடைந்தது. ஏன்? எபேசு பட்டணமே கூட மண்மேடாகிப் போனது! ஆனால் சத்தியமோ, உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் காற்றுப் புகாத இடங்களிலெல்லாம் ஏறுநடை போட்டுக் கொண்டு தன் பயணத்தைத் தொடர்கிறது.

ஆகவே, மதத்துறையின் மகுடாதிபதிகளே, மக்களை சிந்திக்க அனுமதியுங்கள். சிந்திக்கத் தொடங்கினால் உங்கள் சொகுசு வாழ்க்கையும், சுகபோகமும் பறிபோகும் என்று எண்ணி அதைத் தடுத்து நிறுத்த வீண் முயற்சிகளில் ஈடுபட்டீர்கள். முயன்று தோற்றவர்களின் பட்டியலின் நீளத்தை அதிகப்படுத்த விரும்பினால் அது உங்கள் சௌகரியம். ஆனால், ஒரு வேண்டுகோள் தயவுசெய்து புகழ் பெற்ற நியாய சாஸ்திரி கமாலியேலின் அறிவுரையை சற்றே கேளுங்கள். "தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள்'' அப். 5 : 39.

E. Z. செல்வநாயகம்

## பிறன் குறைகளைப் பெரிதுபடுத்தி மகிழ்கிறவனே. கேள்!

நீ உன் கண்ணில் உள்ள உத்திரத்தைக் கவனியாமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்ப்பதேன்? அல்லது நீ உன் கண்ணில் உள்ள உத்திரத்தைப் பாராமல், உன் சகோதரனிடம், சகோதரனே உன் கண்ணிலுள்ள துரும்பை எடுத்து விடுகிறேன் என்று நீ எப்படிச் சொல்லலாம்?

மாயக்காரனே, முதலில் உன் கண்ணிலுள்ள உத்திரத்தை எடுத்துவிடு, பிறகு உன் சகோதரன் கண்ணிலுள்ள துரும்பை எடுக்க உனக்குத் தெளிவான பார்வை கிடைக்கும்.

லூக்கா 6 ; 41, 42

# கள்ளப் போதகர்கள்

நாம் ஏற்றுக் கொண்டாலும், இல்லையென்றாலும் இன்று நம்மிடையே கள்ளப் போதகர்கள் இருக்கின்றனர் என்ற உண்மையை மறைக்க முடியாது.

''பிரியமானவர்களே, உலகத்தில் அநேகக் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்'' (1 யோவான் 4 : 1) என்றும் மீண்டுமாக, ''கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள்'' [II பேதுரு 2:1] என்றும் வேத வசனங்கள் நம்மை எச்சரிக்கின்றன.

கள்ளப் போதகர்களும், தீர்க்கத்தரிசிகளும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்தபடியால், இன்றுகூட தேவனுடைய பிள்ளைகளின் மத்தியிலும் அவர்கள் இருப்பதைக்கண்டு நாம் அதிசயப்பட்த் தேவையில்லை.

வேதாகமத்தின் கீழ்க்கண்ட வசனங்களைப் படித்து பார்த்து அவற்றில் கூறிய எச்சரிக்கைகளைக் கவனிக்க உங்களை வேண்டுகிறோம்; அப்போஸ்தலர் 20:28-31; 1 தீமோ. 4: 1-5; II தெச. 2:1-12,

சபையின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்து, போதித்துவந்த கள்ள போதகர்களில் இமெனேயும், அலக்சாண்டரும் குறிப்பிடத்தக்கவர்கள் (1 தீமோத்தேயு 1:19-20) சத்தியத்தைப் புறக்கணித்துவிட்டு, மாற்றுப் பாதையில் மக்களை அழைத்துச் சென்ற மற்றொரு கள்ள போதகர் எலிமா என்பவராகும் [அப். 13 : 7-12]

தான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறதாக ஒருவர் சொல்லுவதால் மட்டுமே அவரின் போதனையை சுவிசேஷப் பிரசங்கம் என எடுத்துக் கொள்ள முடியாது. ''எல்லோருக்கும் இரட்சிப்பைத் தருகிறோம் வாருங்கள்'' என்று அழைப்பது; அல்லது பாவங்களை அறிக்கை செய்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள ஜெபம் செய்வது; அல்லது இரட்சிப்புக்கு விசுவாசம் மட்டுமே போதும் என்பது, அல்லது ''உங்கள் கைகளை

வானொலிப்பெட்டி, டி. வி. மேல் வைத்து பரிசுத்த ஆவியால் நேரிடையாக இரட்சிப்படையுங்கள்'' என்றெல்லாம் போதிப்பது வேதாகமப் போதனைகள் அல்ல. இவை தவறான போதனைகளாகும். மேற்சொன்னவைகளை மட்டும் செய்தால் போதும் பாவிகள் இரட்சிப்படைய முடியும் என்று கூறும் வேத வசனங்களைக் காட்ட முடியுமா? இவ்வாறு செய்து பாவிகள் இரட்சிப்படைய முடியும் என்பது தேவனுடைய வழி என்றால் வேதாகமம் ஏன் அவ்வாறு கூறவில்லை? சிந்தித்துப்பாருங்கள்.

சத்தியத்தைப் போதிப்பதாகவே ஒவ்வொரு கள்ளப்போதகரும் தன்னைப்பற்றி கூறிக்கொள்ளுகிறார். ''மக்களை ஏமாற்றி திசைதிருப்புவதே எனது வேலை'' என்று எந்த கள்ளப் போதகரும் முன்னறிவிப்பு செய்து கொண்டு வருவதில்லை. நிறைந்த படிப்பு, வசீகரத்தோற்றம் இனிமையான குரல், இவற்றைப் பெற்றிருக்கும் பலர் சுவிசேஷத்தைப் போதிப்பவர்களாக இருப்பதில்லை. அவர்கள் அவசியமான இரட்சிப்பின் வழியை விட்டுவிட்டு மனிதனுடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் போதிப்பவர்களாக இருக்கின்றனர் [மத்தேயு 15 : 9; மாற்கு 7 : 6–13].

எனக்கு ஒரு கணக்கரைத் (Accountant) தெரியும். பல விஷயங்களில் ரொம்பக் கெட்டிக்காரர். அரசியலை அலசுவார் சினிமா, கிரிக்கெட் சங்கீதம் எதையும், பற்றி நன்கு விமரிசிப்பார். ஆனால் கணக்கு மட்டும் தப்புத் தப்பாகப் போடுவார். அதனால் பாதிக்கப்பட்ட ஒரு நண்பர் 'நம்முடைய கணக்கருக்கு கணக்கு ஒன்றைத் தவிர மற்ற எல்லாம் தெரியும்' என்று கூறியபொழுது, அலுவலகத்தில் இருந்த அனைவரும் அந்த நகைச்சுவையை ரசித்து மகிழ்ந்தோம். அவரைப் போன்றவர்கள்தான் நம்முடைய கள்ளப்போதக நண்பர்களும்.

சாத்தான் மனிதரை ஏமாற்றுவதில் வல்லவன். தன்னை மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக வெளிச்சத்தின் தூதனுக வேஷம் மாறிக் கொள்ளவும் தயங்க மாட்டான். அவனுடைய ஊழியக்காரரும் [வெளிப்படையாக அவனுக்கென்று ஊழியக்காரர் கிடையாது] நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தை தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே என்கிறார் பவுல் [II கொரி. 11 : 13-15] காரியங்கள் இவ்வாறு இருக்க, தவறான போதகர்களை இனங்கண்டு கொள்வதுதான் எவ்வாறு?

மிகச்சுலபம். பொன்வேலை செய்யும் தட்டானிடத்தில் தங்க நகைகளைக் கொண்டு போனால் உடனே அவன் உரைகல்லில் உரைத்துப் பார்த்து அது தங்கமா இல்லையா என்று திட்டமாகச் சொல்லி விடுகிறான்.

அதேபோல் சத்திய வசனங்களைக் கொண்டு அவர்கள் போதனைகள் சரியானவையா? அல்லது இல்லையா? என்று சோதித்தறியலாம். அப் 17 : 11.

"ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவ பக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால், அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும் பற்றி நோய் கொண்டவனுமாயிருக்கிறான்; அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும் பொல்லாத சம்சயங்களுமுண்டாகி, கெட்ட சிந்தையுள்ளவர்களும், சத்தியமில்லாதவர்களும், தேவ பக்தியை ஆதாயத் தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு" [1 தீமோத்தேயு 6 : 3-5]. ஆகவே ஒரு பிரசங்கி தேவனையும், கிறிஸ்துவையும் உடையவர் என்றால் அவன் கிறிஸ்துவின் உபதேசத்தின்படி போதிக்க வேண்டும். யோவான் 9-11.

"நான் தேவனை எவ்வளவு நேசிக்கிறேன் தெரியுமா? சத்திய வசனங்களை எப்படி நேசிக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? என்னுடைய உயிர்மூச்சே வேதாகமம்தான்; ஆத்தும இரட்சிப்புக்கு நான் எப்படி அலைகிறேன் தெரியுமா?"-இப்படியாக பெருமையுடன் பேசும் கள்ளப் போதகர்கள் நிறைய உண்டு. ஆனால் நடைமுறையிலே இவர்கள் செய்வதென்ன தெரியுமா? தேவனுடைய எளிதான சத்தியத்தை மாற்றி, மறைத்துத் திரித்து, வெட்டி, ஒட்டி தங்களுடைய சொந்தக் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் சேர்த்து கதம்பமாக்கி சத்தியத்தின் வல்லமையைப் பலவீனப்படுத்தி விடுகிறார்கள்.

ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் என்று கீழ்வரும் வசனங்கள் நமக்குத் தெளிவாகப் போதிக்கின்றன. மாற்கு 16 : 15-16; அப் 2 : 36-38; 22 : 16 ரோமர் 6 : 3-5; கலா 3:26-27; 1 பேதுரு 3 : 20-21. ஆனால் கள்ளப் போதகர்கள் இரட்சிப்புக்கு தேவன் அளித்த திட்டத்தை ஒதுக்கித் தள்ளி விட்டு தங்கள் மாம்சமும் மனதும் விரும்பினதைப் போதிக்கிறார்கள். இவர்கள் இயேசு கிறிஸ்து நிறுவிய சபையின் முக்கியத்துவம் (மத் 16:18-19; அப் 20:28; எபே 1:22-23; 4:4-6) தேவனுடைய வழிபாட்டு முறைகள் ஆகியவைகளை நீக்கி விட்டு, அதற்குப் பதிலாக தங்கள் சொந்த முறைகளைப் புகுத்தி விடுகிறார்கள். ஏனெனில் மக்களுடைய ஊன் இயல்புக்கும், மூட நம்பிக்கைக்கும் உற்சாக மூட்டுவதாக இருந்தால்தான் சுவாரஸ்யமாக இருக்கும் என்பது 'அவர்கள் எண்ணம். தங்களைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொண்டு, வாத்தியக் கருவிகளை ஆராதனையில் உபயோகிப்பது, விக்கிரக வணக்கம், படங்கள் ஆகியவற்றை வணங்குவது போன்ற காரியங்களைச் செய்கிறார்கள்.

இவ்வாறான போதகர்கள், வேதாகமத்தில் தங்கள் நடவடிக்கைகளுக்கு ஒத்து வராத சில பகுதிகளை மிகவும் சாமர்த்தியமாக ஒதுக்கி

விடுவதை நீங்கள் அறிவீர்களா? பிரிவு சபைகளைச் சார்ந்த போதகர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் போதிக்கிறார்கள், என்றாலும் இயேசு-கிறிஸ்துவின் மகத்தான கட்டளையாகிய "உலகமெங்கும் போய் சுவி-சேஷத்தை அறிவியுங்கள்" என்பதை இவர்கள் கடைபிடிப்பதே இல்லை. (மத்தேயு 28 : 18-20; மார்க் 16 : 15-16; லூக்கா 24 : 46-47)

மேலே குறிப்பிட்ட வசனங்களைப் படித்துப்பாருங்கள் இவற்றை ஒரு உண்மையான போதகர் எவ்வாறு ஒதுக்கித் தள்ள முடியும்? பிரிவு சபையைச் சார்ந்த பிரபலமான ஒரு போதகரிடம், "பாவி-யானவன் விசுவாசித்து, இரட்சிப்படைய ஞானஸ்நானம் பெற வேண்டும் என வேதாகமம் போதிக்கிறதா? "என்று கேட்டபோது, அவர் அளித்த பதில். ஆமாம்.. நான் இவ்வாறாக படித்த நினைவிருக்கிறது. ஆனால் அதை எங்கு தேடுவது என இப்போது நினைவில்லை" என்பது தான் "இவ்வாறாக நீங்கள் எப்போதாவது போதித்ததுண்டா?" என அடுத்துக்கேட்டபோது, "நிச்சயமாக இவ்-வாறு போதிக்கவில்லை" ஏனெனில் அது அவ்வளவு முக்கியம் இல்லை. என்ற பதில் வந்தது.

இயேசுக் கிறிஸ்துவின் மகத்தான கட்டளையை ஒதுக்கித் தள்ளும் ஒரு சுவிசேஷம் பிரசங்கம் இருக்கமுடியாது. அல்லது பேதுருவின் முதல் சுவிசேஷப் பிரகடனத்துக்கு (அப்போஸ் 2 : 36-38) அது எதிராக இருக்க முடியாது. அது 1 பேதுரு 3 : 20-21 வசனங்களில் கூறியுள்ள-வற்றை மறுக்க இயலாது. அல்லது தேவனுடைய பரிசுத்த வார்த்தைகளிலிருந்து எதையும் ஒதுக்குவதோ அல்லது சேர்ப்பதோ ஒரு வேதாகமப் பிரசங்கம் ஆகாது (வெளி 22 : 18-19); விசுவாசத்தால் மட்டுமே பாவிகள் இரட்சிக்கப்படுவதற்குப் போதுமென்ற கூற்று யாக்கோபு 2 : 14-26ல்கூறப்பட்டவைகளை திரித்துக் கூறுவதாகும். அது வேதா-கமப் பிரசங்கம் அல்ல. பாவிகள் ஜெபத்தினால் இரட்சிப்படைகிறார்கள் என வேதாகமப் பிரசங்கம் கூறுவதில்லை. (யோவான் 9:31; நீதி 28 : 9: மார்க்கு 16:16; அப்போஸ் 2 : 38).

தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு மட்டுமே பிதா; சாத்தானு-டைய பிள்ளைகளுக்கு பிதா அல்ல. (யோவான் 8 : 44; 1 யோவான் 3 : 10). தண்ணீராலும் ஆவியாலும் மீண்டுமாக பிறந்தவர்கள் மட்டுமே மோட்சத்திலுள்ள தேவனை தங்களின் பிதா என அழைக்கும் உரிமை உள்ளவர்கள் (யோவான் 3 : 3-5) அப் 2:36—38; 22 : 16; ரோமர் 6 : 3-4).

ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி பேசுகையில் அதைப்பற்றிய எல்லா வசனங்களையும் எடுத்துக்கூற நேரம் அனுமதிப்பதில்லை என நாம் அறிவோம். ஆனால் நம்பிக்கையின்மையின் காரணத்தால் சில வசனங்களை வேண்டுமென்றே ஒதுக்கித் தள்ளுவதை நாம் சகிக்க முடியாது. தங்களை சுவிஷேசக போதகர்கள் என விளம்பரம் செய்து

கொள்ளும் இப்படிப்பட்டவர்கள், தேவனுடைய வசனங்களை மேலோட்டமாகக் கூறிவிட்டு, மனிதனுடைய உபதேசங்களையும் கட்டளைகளையும் தொடர்ந்து போதித்துக் கொண்டிருப்பது நமக்கு மிகவும் சங்கடத்தை விளைவிப்பதாகும். (மத்தேயு 15 : 9; மார்க் 7 : 1-13; II தீமோ 4 : 1-8).

எனவே கள்ளப் போதகர்களை நாம் அடையாளம் கண்டு, அவர்கள் போதனைகளை ஒதுக்கித்தள்ள, அவர்கள் பேசுவது வேதாகமத்தில் இருக்கின்றனவா என்று சோதித்து அறிவதே சரியான ஒரே வழியாகும். அப். 17 : 11.

ஆங்கிலத்தில்
W. A. ஹாலி

தமிழில்
எஸ். எஸ். ராஜன்

## நற்பேறு பெற்றோர் யாவர்?

தம் எளிய ஆன்மீக நிலையை உணர்ந்தவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; விண்ணரசு அவர்களுக்குரியது.

துயரத்தில் ஆழ்ந்திருக்கிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; அவர்களுக்குக் கடவுளின் ஆறுதல் கிடைக்கும்.

பணிவுடையவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; அவர்கள் உலகத்தையே உடைமையாகப் பெறுவார்கள்.

நீதி நிலவ வேண்டுமென்பதில் மிகுந்த வேட்கை கொண்டவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; கடவுள் அவர்கள் வேட்கை நிறைவேறும்படி செய்வார்.

இரக்கம் காட்டுகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; கடவுள் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்.

தூய உள்ளமுடையவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; அவர்கள் கடவுளைக் காண்பார்கள்.

அமைதி நிலவச் செய்கிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; அவர்கள் கடவுளின் மைந்தர்கள் எனப்படுவார்கள்.

நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப் படுகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்; விண்ணரசு அவர்களுக்குரியது.

என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து துன்புறுத்தி, உங்களைப் பற்றித் தீமையானவற்றையெல்லாம் பொய்யாகச் சொல்வார்களானால், நீங்கள் நற்பேறு பெற்றவர். (மத் 5: 3-11)

# நமது பெலன் கர்த்தரே!

ஒரு தகப்பனும் மகனும் தங்கள் தோட்டத்தில் வேலே செய்து-கொண்டிருந்தார்கள். இளைஞன் ஒரு பாராங்கல்லைப் புரட்ட முயற்சித்தான். தன்னுடைய முழுபலத்தையும் பிரயோகித்தும் முடியாமற்போகவே களைத்துப்போய் உட்கார்ந்துகொண்டே அடுத்து என்ன யுக்தியைக் கையாளலாம் என்று தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அவன் செய்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்த அவனுடைய தந்தை அவனைக் கூப்பிட்டு "உன்னுடைய பலம் முழுவதையும் உபயோகித்துப் பார்த்தாயா?" "ஆம்அப்பா என்று பதில் வந்தது" இல்லே, நீ உன் முழுபலத்தையும் உபயோகிக்கவில்லை. நான் உன்னுடன் கூடவே இருக்கிறேன் ஒருபோதும் என்னுடைய உதவியை நீ கோரவே யில்லையே என்றான் தகப்பன்.

இதை வாசிக்கிற நண்பனே, சகோதரியே! நாமும்கூட அநேக முறை அந்த வாலிபனைப் போலத்தான் நடந்து கொள்கிறோம். நம்முடைய வாழ்க்கைப் பிரச்சனைகளை அனைத்தையும் நாமே தீர்த்து-விட முடியும் என்று எண்ணிச் செயல்படுகிறோம். அப்படி நம்முடைய சொந்த ஞானத்தைக் கொண்டு காரியங்களைச் செய்ய முற்பட்டு முடியாமற்போகும்போது நாம் சோர்ந்துபோய் சங்கடப்பட்டு சலிப்பு அடைந்து போகிறோம். வாழ்க்கையை வெறுத்து ஓலமிடுகிறோம். நாம் இவைகளைச் சமாளிப்பதற்கான உண்மையான பலத்தை எங்கிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதை சிந்திக்க மறந்து விடுகிறோம்.

தேவன் நம்மீது அன்பும் இரக்கமும் உள்ளவராக, நம்முடைய இன்னல்களையும் துன்பங்களையும் நிவர்த்தி செய்து நம்முடைய கண்ணீ-ரைத் துடைக்கக் காத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் நாமோ அவரிடம் உதவிக்காக மனுக் கொடுக்காமல் நாமாகவே பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள முயன்று தோல்வியடைந்து துவண்டு கிடக்கிறோம்.

மோசேயும்,இஸ்ரவேல் மக்களும் செங்கடலை வெட்டாந்தரையை கடந்து வருகிறது போல் கடந்துவந்த மகிழ்ச்சியால் உற்சாகமாகத் தேவனைத் துதித்துப் பாடினார்கள். "கர்த்தர் என்பெலனும், என் கீதமுமானவர், அவர் எனக்கு இரட்சிப்புமானவர். அவரே என் தேவன்" அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய தேவன் அவரை உயர்த்துவேன்" யாத். 15:2. இந்த அற்புத நிகழ்ச்சி ஒன்றை நினைத்தே அவர்கள் காலமெல்லாம் கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து தங்கள் வாழ்க்கைப் பிரச்சனை அனைத்தையும், ஆண்டவரிடம் எடுத்துச்சென்று தீர்வுகாண

முற்பட்டிருக்கலாம். ஆனால், என்ன பரிதாபம். வெகு சீக்கிரமே அவர்கள் தேவனுடைய வல்லமையையும், அன்பையும் மறந்துவிட்டு தங்கள் அடிமைத்தன நாட்களில் அவர்கள் பட்ட துன்பங்களையும், வேதனைகளையும் மறந்துவிட்டு அங்கே அவர்கள் பெற்றிருந்த சில அற்ப சௌகரியங்களை நினைத்துக்கொண்டு மோசேயிடம் முறுமுறுக்கவும், கலகம் பண்ணவும், புகார் கூறவும் தொடங்கிவிட்டார்கள்.

மானிடரில் பெரும் பகுதி மக்கள் அந்த இஸ்ரவேல் மக்களைப் போன்ற இயல்புடையவர்களே. கர்த்தருடைய வல்லமையையும், அன்பையும் சரியாக ருசித்துப்பார்க்காமல் தங்கள் மனம்போல் வாழவேண்டும் கால்போன பக்கம் போகவேண்டும், கண் பார்த்தவைகளை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் படைத்தவனை மறந்து, தங்கள் வாழ்க்கையில் துன்பங்களையும், வேதனைகளையும், நோய்களையும் தாங்களாகவே அதிகப்படுத்திக்கொள்கின்றனர்.

என்னும் கர்த்தருடைய பேரன்பையும் அவருடைய மாபெரும் தயவையும், இரக்கத்தையும் தன் வாழ்க்கையில் அனுபவித்து அதை மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் சங்கீதங்களாக எழுதி வைத்துள்ள தாவீது அரசன் கூறுவதைக் கவனியுங்கள். ''என் இரட்சிப்பும், என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது. பெலமுள்ள கன்மலையும், என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது. நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறு உத்தரவு அருளினீர். என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னைத் தைரியப்படுத்தினீர் என்று சங். 6:27, 138:3 ஆகிய வசனங்களில் அனுபவச்சாட்சி கூறுகிறார்.

கர்த்தரை ருசித்துப்பார்த்த மக்கள் புதிய ஏற்பாட்டுகாலத்திலும் இல்லாமல் இல்லை. அவர்களில் முக்கியமானவர் பவுல் அடிகளார். வாழ்க்கையில அவர் பட்ட துன்பங்களும், அவருக்கு வந்த சோதனைகள், எதிர்ப்புகள் சொல்லிமுடியாதவை. கிறிஸ்தவ அறம் தழைக்க பலவகையில் போராடி அதை நிலைநாட்டிய பெருமை அவருக்கு உண்டு. அவர் என்ன சொல்லுகிறார் என்பதையும் கேட்போம். ''என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை ஏனெனில் நான் எந்த நிலைமையில் இருந்தாலும், மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் எவ்விடத்திலும், எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாக இருக்கவும், பரிபூரணமடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு.'' பிலி. 4:11-13. என்கிறார்.

அப்போஸ்தலன் பவுல் கூறுகிற இந்த சூத்திரம் புதுமையானதோ அன்றி குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டுமோ வாக்களிக்கப்பட்டது அல்ல பல்லாண்டுகாலமாக கர்த்தருடைய அன்பையும், வல்லமையை-

யும் ருசித்துப் பார்த்த சகல பரிசுத்தவான்களின் அனுபவமே. இது விசுவாசிக்கிற எவருக்கும் கிட்டும்.

ஆகவே நானும் நீங்களும் கூட கர்த்தரைச் சார்ந்துகொண்டு கர்த்தரேயல்லாமல் எனக்கு வேறே பெலன் இல்லை என்று சொல்லுவோமாக!

கிறிஸ்து தான் என்னுடைய ஆவிக்குரியவாழ்வுக்கு வழிகாட்டி; ஜெபம் எனது உயிர்மூச்சு என்று முழங்குவோமாக! இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்ற சொற்றொடர் உள்ளான மனுஷனைப் பெலப்படுத்துவதற்கு உதவும் மாபெரும் சக்தி என்று உணர்ந்து அவருடைய சித்தத்துக்கு கீழ்ப்படிந்து அவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தினால் அவருடைய பெலன் நமக்குப் போதுமானது. அவர் கிருபை நம்மீது நிழலிடும்.

சங்கீதக்காரனோடு சேர்ந்து தாழ்மையாக, "துணிகரமான பாவங்களுக்கு உம்து அடியேனை விலக்கிக் காத்துக்கொள்ளும். அவைகள் என்னை ஆண்டுகொள்ள வொட்டாதிரும், அப்பொழுது நான் உத்தமனாகி பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும் உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக" என்று கூறுகிறார் (சங். 19:13-14.)

ஆம்! ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணை அவரே. துன்ப நேரத்தில் ஆறுதலும் அவரே; நமது பெலன் கர்த்தரே!

ராய் Fபுல்லர்

## சட்டியில் இருப்பது தான் அகப்பையில் வரும்.

நல்ல மனிதன் தன் உள்ளம் என்னும் நல்ல களஞ்சியத்திலிருந்து நலமானதை எடுத்து அளிக்கிறான். பொல்லாத மனிதன் தன்னுள்ளிருக்கும் பொல்லாத களஞ்சியத்திலிருந்து பொல்லாததை எடுத்து அளிக்கிறான். உள்ளத்தில் நிறைந்துள்ளதையே ஒருவனுடைய வாய் பேசும். லூக்கா 6:45.

# கிறிஸ்துவின் சபை என்பதும் இராஜ்ஜியம் எனபதும் ஒன்றுதான்

சபை என்பதும், இராஜ்ஜியம் என்பதும் ஒன்றே என்று நாம் நிரூபிப்பதில் நாம் வெற்றி பெற்றுவிட்டால், பின்பு கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தின் காரியங்கள் யாவும் கிறிஸ்துவின் சபையைக் குறிக்கிறது என்று திட்டவட்டமாக அறியலாம்.

மத்தேயு. 16:18, 19. ஆகிய வசனங்களில் இவ்வார்த்தைகளை இயேசு மாறி மாறி உபயோகித்திருக்கிறார். "மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் **என் சபையைக்** கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. **பரலோக இராஜ்ஜியத்தின்** திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்றார் **சபை, இராஜ்ஜியம் இரண்டுமே பரிசுத்தவான்களால் ஆக்கப்பட்டன** இந்த இரண்டுமே பரிசுத்தவான்களால் ஆக்கப்பட்டவைகள் என்பதைப் பின்வரும் வசனங்கள் நிரூபிக்கின்றன. கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் **பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும்,** பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற **தேவனுடைய சபைக்கு** ....." என்று பவுல் எழுதுகிறார் (1 கொரி. 1:2.) ஆகவே சபை பரிசுத்தவான்களால் கட்டப்பட்டுள்ளது. "ஒளியிலுள்ள **பரிசுத்தவான்களுடைய** சுதந்திரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாகினவரும், இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய **இராஜ்ஜியத்திற்கு** உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்" என்று கொலோசெயருக்கும் எழுதினார். (கொலே 1:12, 13) **பரிசுத்தவான்கள் இராஜ்ஜியத்துக்கு உட்படுத்தப்பட்டார்கள்.** ஆக தேவனுடைய சபை இராஜ்ஜியம் இரண்டும் பரிசுத்தவான்களைக் கொண்டுள்ளதால் இரண்டும் ஒன்றுதான்.

**சபை, இராஜ்ஜியம் இரண்டும் இரத்தத்தினால் வாங்கப்பட்டவர்களைக் கொண்டுள்ளது.**

அப். 20:28-ல் "தேவன் தம்முடைய சுய இரத்தத்தினால் சம்பாதித்துக்கொண்ட தமது சபை" யைக்குறித்து சொல்லப்பட்டுள்ளது. சபை என்பது **இரத்தத்தினால்** மீட்கப்பட்டவர்களின் சங்கம் என்று நாம் அறிவோம். அப்போஸ்தலன் யோவான், கிறிஸ்துவைக் குறித்து "நீர் அடிக்கப்பட்டு... எங்களை தேவனுக்கென்று உம்முடைய **இரத்தத்தினாலே** மீட்டுக்கொண்டு, எங்களை தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர்" என்கிறார்

வெளி 5:9, 10. மேற்சொன்ன இரண்டு வசனப்பகுதிகளிலும் சபை, இராஜ்ஜியம் இரண்டுமே **இரத்தத்தால்** வாங்கப்பட்டவர்களால் ஆக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள். ஆகவே **சபை** என்பதும் **இராஜ்ஜியம்** என்பதும் ஒன்றே.

**தேவனுடைய வீட்டின் வேலைக்காரர்கள் இராஜ்ஜியத்தின் ஆசாரியார்கள்**

சபை என்பது தேவனுடைய ஆவிக்குரிய வீடு (1 தீமோ 3:15) தேவனுடைய வீடு பரிசுத்தமாக்கப்பட்ட ஆசாரியர்களால் ஆக்கப்பட்டுள்ளது. 1 பேதுரு 2:5. அந்த ஆசாரியர்களே இராஜ்ஜியத்தின் அங்கத்தினராய் இருக்கிறார்கள். (வெளி 1:6; 5:9,10) ஆகவே தேவனுடைய வீடாகிய சபை ஆசாரியர்களுடைய இராஜ்ஜியம் பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி, ''இராஜ்ஜியம்'' என்ற வார்த்தை கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தைக் குறிக்குமானால் அது கிறிஸ்துவின் சபையை குறிக்கிறது. ஆகவே இயேசுவின் இரத்தத்தினாலே வாங்கப்பட்ட **சபையும்** (அப் 20:28) இரத்தத்தினால் மீட்கப்பட்ட **இராஜ்ஜியமும்** (வெளி 5:9, 10)ஒன்றே.

யோவான் ஸ்நானகனும்; இயேசுவும் பரலோக இராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது ''என்று போதித்தார்கள். (மத் 3:1,2; மத் 4:17; மாற்கு 1:5.) அதே செய்தியையே அறிவிக்கும்படி பன்னிருவருக்கும், எழுபது பேருக்கும் கட்டளை கொடுத்தார் (மத் 10:1, 7: லூக் 10:1, 9) இன்னும் இராஜ்ஜியம் வரவில்லை என்று சிலர் போதிப்பார்களானால் யோவான் ஸ்நானகன், இயேசு மற்றும் பன்னிருவர் அறிவித்ததற்கு விரோதமாய் சமீபித்திருக்கவில்லை'' என்று சொல்வதற்கு ஒப்பாகும்.

மேலும் இயேசு இராஜ்ஜியம் வருவதை சிலர் காண்பார்கள் என்றும் சொன்னார். (மாற்கு 9:1) இராஜ்ஜியம் இன்னும் வரவில்லை என்று சொல்லுவோமானால் சிலர் கிட்டத்தட்ட ஈராயிரம் ஆண்டுகளாய் உயிருடன் இருக்கிறார்கள் என்று பொருளாகும். கிறிஸ்துவின் வார்த்தைகள் அர்த்தமற்றவைகளா? மாற்கு 9:1-ல் ''தேவனுடைய இராஜ்ஜியம் பெலத்தோடே வருவதைக் காணுமுன் சிலர் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று இயேசு சொன்னார். அப் 1:8-ல் ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன் அடைவீர்கள்'' என்று அப்போஸ்தலர்களிடம் சொன்னார். இரண்டையும் இணைத்துப் பார்த்தால் இராஜ்ஜியம் பலத்தோடே வருமென்றும், அது பரிசுத்த ஆவி வரும்போது வரும் என்றும் ஆகிறது.

இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும் இடமும், நேரமும், நாழிகையும் கூட அறிவிக்கப்பட்டிருக்கிறது. இயேசு பரமேறுவதற்கு முன்பாக ''நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரில் தங்கியிருங்கள் என்றார். அப்படியே எருசலேமிலே (அப் 1:5) பெந்தேகோஸ்தே நாளில் அப் 2:1 (மூன்றும் மணி வேளையில் அதாவது நம்முடைய நேரம் 9 மணியளவில்) (அப் 2:15) பரிசுத்த ஆவியானவர் பலத்தோடே வந்தபொழுது **இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டது.** அப் 2:1-4. அதுவே **கிறிஸ்துவின் சபை** உதயமான நேரம்

**எட்வார்ட்டன்**

# ஒருவன் கிறிஸ்தவனாகும் போது ஏற்படும் மாற்றம் என்ன?

ஒருவன் கிறிஸ்தவனாகும்போது நிச்சயமாக அவனில் ஏதாவது மாற்றம் ஏற்பட வேண்டும். எவ்வித மாற்றமும் ஏற்படா விட்டால் அவன் ஏன் கிறிஸ்தவனாக விரும்புவான்?

கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்னர், கிறிஸ்தவம் தோன்றிய காலத்தில், கிறிஸ்தவம் தங்களுக்கு அளிப்பது என்ன என்பதை நன்கு உணர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள், தினமும் கிறிஸ்தவராக மாறினர் (அப்போஸ்தலர், 2, 3)

ஆனால் இன்று கிறிஸ்தவத்தைப் பற்றிய தவறான செய்திகளே பெரும்பாலான மக்களுக்குப் போதிக்கப் படுகின்றன. வெறும் சமுதாய அந்தஸ்திற்காக மட்டுமே ''கிறிஸ்தவன்'' ஆக மாறும் மக்கள் பலர் இன்று உண்டு. மற்றும் சிலர் உலக ஆதாயத்தைப் பெறும் நோக்கில் கிறிஸ்தவத்தைத் தழுவுகின்றனர். சொல்லப் போனால், உலக ஆதாயத்துக்கே இன்று முக்கியத்துவம் தரப்படுகிறது. கிறிஸ்தவம் தங்களுக்கும், உலக முழுமைக்கும் உண்மையாகவே தரக் கூடியவற்றைப் பற்றி இவர்கள் அறியாதிருக்கிறார்கள்.

எனவே, நீங்கள் கிறிஸ்தவராகும் போது உங்களில் ஏற்படும் மாற்றம் யாது என்பதை கவனிப்போம்.

ஒருவன் கிறிஸ்தவனாகும் போது அவனுடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்படுகின்றன. இது ஒரு அற்புதமான, அருமையான காரியம் அல்லவா?

**எல்லா பாவங்களும் மன்னிக்கப் படுகின்றன!**

பலர் இன்று தங்கள் பாவ மூட்டையை தலையில் சுமந்தவாறு, நரக பயத்துடனே, தங்கள் வாழ்நாட்களைத் தள்ளிக் கொண்டு, தங்கள் பாவ மன்னிப்புக்கு எவ்வித உத்திரவாதமுமின்றி அவதிப் பட்டுக் கொண்டிருக்கின்றனர். பாவமன்னிப்பு வேறு எங்கும், எவராலும் உத்திரவாதம் செய்யப்படவில்லை. ''கடவுள்களை'' திருப்திப்படுத்த ஏதாவது பரிகாரங்கள் செய்தால் பாவங்கள் மன்னிக்கப் படும் என மக்களிடம் தவறாகப் போதிக்கப்படுகிறது. சிலர் ''திரு யாத்திரைகள்'' செல்வதும், பலவிதமான ''தண்டனைகளை'' தங்களுக்குத்தானே அளித்துக் கொண்டு, வீணாக பாவ நிவாரண வழிகளைத் தேடுகின்றனர். ஆனால் தனது இரட்சிப்புக்கு மனிதன் எவ்வித விலையும் தர இயலாது. ஏனெனில் அவன் பாவி தனது செயல், வார்த்தை, உணர்ச்சி இவற்றின் மூலமாக தினமும் பாவம் செய்கிறான். மாம்சமான

மனிதனில் நல்லது எதுவும் தங்குவதில்லை. பாவம் செய்யாத மனிதன் இருந்ததுமில்லை, இருப்பதுமில்லை. ஆகவே தான் இயேசுகிறிஸ்து பாவிகளை இரட்சிக்க சிலுவையில் மாண்டார். தேவன் இயேசுவில் மனிதனானார்; மனிதன் தனக்குத்தானே செய்ய முடியாததை தேவன் மனிதனுக்குச் செய்தார்.

பாவி தன் சொந்த பாவங்களுக்காக மரிப்பதற்குப் பதிலாக, கிறிஸ்து அவனுடைய பாவங்களை சுமந்து, அவனுக்காக மரித்தார். வேதாகமம் கூறுகிறது: "அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். ...நாம் பாவிகளாக இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப் பண்ணினார். (ரோமர் 5: 6-8) மீண்டுமாக வேத வசனங்கள் கூறுவதைக் கவனிப்போம்.

அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.........நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரிந்தியர். 5; 19, 21).

இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தபடியால், நமது பாவங்கள் அவர் வழியாக மன்னிக்கப்படுகின்றன. ஆனால், எப்போது? இக் கேள்விக்கு விடையாக, திரளாக மக்கள் கூட்டத்தில் பேதுரு போதிக்கும் போது, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என கூறுகிறார். (அப் 2:38)

தமஸ்கு நகரில், விசுவாசித்து தனது பாவங்களுக்காக சவுல் (பவுல்) மனதுருகிப்போனபோது, தேவன் அனனியாவை அவனிடம் அனுப்பினார். அனனியா சவுலை நோக்கி, "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றார்" (அப் 22:16). எனவே, கிறிஸ்தவனாகும் போது ஒருவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன; அவன் பரிசுத்தமாக்கப் படுகிறான். அது மட்டுமல்ல ......"ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாக இருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" "2 கொரி 5:17 ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" (ரோமர் 8:1). "விசுவாசமுள்ளவனாகி

ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற்கு 16:16). வாக்களித்தபடியே கிறிஸ்து அவனை இரட்சிக்கிறார். அதே சமயத்தில், ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் அவனை சேர்த்துக் கொள்ளுகிறார். (அப் 2:47; எபே 1:22, 23)

கலாத்தியர் 3:26, 27 வசனங்களில் அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். ''நீங்களெல்லோரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.

ஞானஸ்நானம் வழியாக ஒருவன் இயேசுவைத் தரித்து அதன் விளைவாக பிள்ளையாகிறான். பாவத்தின் மூலம் தேவனை விட்டுப்பிரிந்து போனவன், இயேசு மூலமாக தேவனுடன் ஒப்புரவாகிறான் இப்போது, தனது ஜெபத்தின் வழியாக தேவனை ''அப்பா, பிதாவே'' என அவனால் அழைக்கக்கூடும். (ரோமர் 8:15).

அப்போஸ்தலர் பவுல், கொலோசேயர் 1:12-14 வசனங்களில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்: ''ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவராக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது''

தனது உடன் கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதுவதைக் கவனியுங்கள். ''இருளின் அதிகாரத்திலிருந்து தேவன் அவர்களை விடுதலையாக்கி, தனது குமாரனுடைய அரசுக்குள் அவர்களை உட்படுத்தினார்''. எவ்வளவு மாபெரும் மாற்றம்! பாவத்திலும், அறியாமையிலும் வாழ்ந்து வந்தவர்கள், கிறிஸ்தவர்களானதும், பாவத்தினின்று விடுதலையும் மன்னிப்பும் அடைந்தனர்.

மோட்சத்தில் முடிவற்ற வாழ்வு கிட்டும் நம்பிக்கை ஒரு கிறிஸ்தவனுக்கு உண்டு. (யோவான் 3:16). முடிவற்ற வாழ்வுக்கு செல்லுமிடத்தை அவன் அறிவான் (2 கொரி 5:1) அவன் பாவங்கள் மன்னிக்கப்படுவது மட்டுமின்றி, கிறிஸ்துவின் இரத்தம் அவனுடைய சகல பாவங்களையும் நீக்கி அவனை சுத்திகரிக்கும். (1 யோவான் 1:7).

நீங்கள் கிறிஸ்தவரானால், உங்களுக்கும் மோட்சத்தின் முடிவற்ற வாழ்வு கிட்டும். நீங்கள் போகுமிடத்தை நிச்சயமாக அறிவீர்கள். அங்கு உங்களுக்கு முடிவற்ற வாழ்வும் உண்டு. இயேசு கிறிஸ்துவின்

வழியாக உங்கள் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்படும். கிறிஸ்துவுக்குள் நீங்கள் ஒரு கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்தால், உங்கள் பாவங்களை தொடர்ந்து கழுவி உங்களை சுத்தப்படுத்தும்.

வேறு என்ன உங்களுக்குத் தேவை? நண்பரே! நீங்களும் இவ் விதமான ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்ள விரும்புகிறீர்களா? அருகிலுள்ள கிறிஸ்துவின் சபையாரிடத்தில் சென்று விளக்கம் பெறுங்கள்.

சன்னிடேவிட்

## தாழ்மை-கிறிஸ்தவத்தின் சிறப்புப் பண்பு

ஒரு சமயம் விக்டோரியா மகாராணி ஒரு பெரிய வரவேற்பு நிகழ்ச்சிக்குப் போய்வந்து பெருமையோடு படுக்கை-யறைக் கதவை வேகமாகவும், பலமாகவும் தட்டினார் உள்ளே இருந்த கணவர் ஆல்பிரெட் அவளுடைய கர்வமான நடத்தைக்கு பாடம் கற்பிக்கவேண்டும் என எண்ணி, கதவைத் தட்டுவது யார்? என்று வினவினார். அதற்கு அந்த அம்மையார் நான்தான் இந்தியாவின் சக்கரவர்த்தினி என்று பதில் அளித்தார். ஆனால் கதவு திறக்கப்படவில்லை. மீண்டும் பலமாகத் தட்டினார் ராணி. மீண்டும் யார் நீ? என்று கேட்டார்.

நான்தான் இங்கிலாந்து நாட்டு ராணி தெரியவில்லையா? கதவைத் திறங்கள் என்று கேட்டார். அப்பொழுதும் கதவு திறக்கப்படவில்லை. இப்பொழுது அந்த அம்மாவுக்கு ஓர் சந்தேகம். ஏன் கதவைத் திறக்க மறுக்கிறார் என்று யோசித்துப் பார்த்துவிட்டு கொஞ்சம் நிதானமாக, தயவுசெய்து கதவைத் திறவுங்கள் என்று பவ்யமாகக் கேட்டார் நீ யார்? என்று மீண்டும் கேட்டார் கணவர். நான்தான் உங்கள் மனைவி விக்டோரியா என்று பணிவு கலந்த குரலில் பதில் வந்தது. உடனே கதவு திறக்கப்பட்டது.

நாமும் தேவனிடத்தில் நம்முடைய விண்ணப்பங்களை தாழ்மையாக சமர்ப்பிக்கும்போது தேவன் இரங்குகிறார்,

"பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" 1 பேது 5:5B.

## இயேசுவின் புதிய கட்டளை.

நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள், ஏன்? எதற்கு?

நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதனால் நீங்கள் என்னுடைய சீடர்கள் என்று எல்லோரும் அறிந்து கொள்வார்கள். யோவான் (13:34,35.)

# கிறிஸ்தவ ஈகை

உலகத்தின் பல்வேறு பாகங்களில் வாழ்கின்ற பல தரப்பட்ட மக்களின் மொழி, நிறம், நாகரீகம் பண்பாடு என்று ஏதேதோ காரியங்களில் வேற்றுமையும், முரண்பாடும் காணப்பட்ட போதிலும், சிந்தனைப் போக்கிலும் எண்ணங்களிலும் பெரும் ஒற்றுமையைப் பார்க்க முடிகிறது. மனிதர்கள் அவைகளுக்குப் பல சித்தாந்த சாயங்களைப் பூசி நிறங்களை மாற்றி ஜெப்படி வித்தை செய்தாலும் அதன் அடிப்படைத் தன்மை மாறாமலும், மாற்றப்படாமலும் இருக்கிறதை நாம் உணரலாம்.

எடுத்துக்காட்டாக ஈகை அல்லது தர்மம் கொடுத்தல் என்கிற காரியத்தைக் கவனிப்போம். தாங்களாகவே முன்வந்து ஈகை அறத்தினால் ஏற்படும் நிலையான, நியாயமான பலன்களை மனதில் கொண்டு செயல்படுபவர்கள் எத்தனைபேர் என்று சிந்தித்துப் பார்த்தால் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் தேறுவர். மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு ஈகை என்பது கசப்பு மாத்திரை சாப்பிடுகிற அனுபவம் தான். எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி, உருட்டி மிரட்டிச் சம்மதிக்க வைத்தாலும் கீழ்க்காணும் ஏதாவது ஒன்றைப் பிரதியுபகாரமாக எதிர்பார்த்துத் தான் தர்மம் கொடுப்பதற்கு முன் வருகின்றனர் என்றால் மிகையாகாது.

**1. கெண்டையைப்போட்டு விராலைப் பிடிப்பது:**

அதாவது நாம் கொடுக்கும் தர்மத்தின் மூலம் என்ன நன்மைகளைப் பிரதியுபகாரமாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கிறது என்று கணக்குப் போடுபவர்கள் சிலர் உண்டு. அப்போஸ்தலர் நடபடிகள் 8-ஆம் அதிகாரத்தில் மந்திரவாதி சீமோனைப்பற்றி வாசிக்கிறோம். அவன் அப்போஸ்தலருக்குப் பணம் கொடுத்தான். எதற்காக? அவர்களிடமிருந்து பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொண்டு அதைப் பயன்படுத்தி நிறையப் பேரும், புகழும் பணமும் சம்பாதித்து விடலாம் என்று எண்ணினான். அப் : 8 ; 18-21.

**2. பய உணர்ச்சியினால் தற்காப்புக்காகக் கொடுப்பது:**

வேறு சிலர், நாம் இந்த காரியத்துக்குக் கொடுக்காவிட்டால், நம்மை சமாதானமாக வாழவிட மாட்டார்கள். நம்முடைய உடைமைகளுக்குச் சேதம் விளைவித்துத் தொல்லை கொடுப்பார்கள் என்ற உணர்ச்சியினால் உந்தப்பட்டவர்களாகக் கொடுக்க முன்வருவர். நாபாலின் மனைவி அபிகாயில் என்னும் மாது, தாவீது அரசனுக்கு வெகுமதிகளைக் கொண்டு வந்தது இந்த இரகத்தைச் சேர்ந்தது தான். I சாமுவேல் ; 25-ஆம் அதிகாரம்.

**3. கொடுப்பது கொஞ்சம்: எதிர்பார்க்கிற புகழ் ஏராளம்.**

இன்னும் சிலர் குறிப்பிட்ட காரியத்துக்கு நான் ஏதாவது கொடுத்தால் அது என்னுடைய செல்வாக்கை உயர்த்தி சமுதாயத்திலே

ஒரு புதிய அந்தஸ்தைக் கொடுக்குமா? என்று எண்ணிக்கொண்டு செயல்படுவர். அப்போஸ்தலர் ஐந்தாம் அதிகாரத்தில் நாம் சந்திக்கிற அனனியாவையும் சப்பீராளையும் இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

**4. புண்ணுக்கு புனுகு தடவுவது :**

இன்னும் கொஞ்சம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் செய்யும் பலவகையான சமூக, தேவ விரோதச் செயல்களை மறைத்து ஊரை ஏமாற்ற உத்தமர் வேஷம் போட்டுக்கொண்டு தர்மத்துக்கு கொடுப்பது ஒரு பங்கும் விளம்பரத்துக்கு ஒன்பது பங்கும் செலவிடுவார்கள். மத்தேயு சுவிசேஷம் ஆறும் அதிகாரத்தின் முதல் நான்கு வசனங்களிலும், இன்னும் பல்வேறு இடங்களிலும் நமது ஆண்டவர் பரிசேயர்களைக் கடிந்து கொண்டது இப்படிப்பட்ட போலிபக்தி காரணமாகத்தான்.

மேற்கூறிய நோக்கங்கள் ஈகை அறத்தின் சீரிய நோக்கத்தை மாசுபடுத்துவதாக இருந்த போதிலும் ''தற்காலப் போக்கு'' என்று கூறிக் கொண்டு இவற்றில் சிலவற்றை மனித சமுதாயம் ஏற்றுக்கொண்டு செயல்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. எடுத்துக் காட்டாக, ஒருவர் கல்வி நிலையம் ஒன்றுக்கு ஒரு மேசையோ, மேசை விரிப்போ அல்லது ஓரிரு இருக்கைகளோ அன்பளிப்பாக வாங்கிக் கொடுக்கிறார் என்றால் அதிலே அவர் பெயரைப் பொறித்துக் கொள்வது தவறல்ல என்பது சமூகத்தால் ஒப்புக்கொண்ட ஓர் நிலைமையாகும். இவ்விதமாக மனிதனுடைய உள்ளக் கிடக்கைகளை அறிந்து அவர்களுடைய உள் நோக்கங்களுக்கும் கொஞ்சம் தீனி போட்டாலுமே கொடுக்கிற காரியத்தில் மக்களை விருப்பத்தோடு ஈடுபாடு கொள்ளச் செய்ய முடியவில்லை.

**5. கிறிஸ்தவ ஈகை இன்னும் கடினம் :**

பொதுவான தர்ம சிந்தனையையே, மனிதர்களுடைய விருப்பத்தை ஓரளவு திருப்திப் படுத்திக் கொண்டு, ஊக்குவிப்பது கடினமாக இருக்கும்போது இவைகள் ஒன்றையும் ஏற்றுக்கொள்ளாதது மட்டும் இன்றி—கடிந்து கொள்ளுகிற கிறிஸ்தவ ஈகையை எவ்வாறு கடைப் பிடிக்கத் தூண்டுவது? கொஞ்சம் சர்க்கரையையும் போட்டு, விளக்கெண்ணெயின் வளவளப்பையும் குறைத்து, சரி, இனிக் குடி மகனே, என்றாலே உதட்டைப் பிதுக்கி, முகத்தைச் சுளிக்கின்ற குழந்தைக்கு இவைகள் ஒன்றையுமே செய்யாமல் விளக்கெண்ணெயைக் குடிக்கச் சொன்னால் எப்படியிருக்குமோ அப்படித்தான் கிறிஸ்தவ ஈகை விஷயமும் இருக்கிறது. கொடுப்பவர்களின் உள்ளங்களில் நர்த்தனம் ஆடும் வீண் பெருமைகளுக்குக் கொஞ்சம் கண் ஜாடை காட்டியே, காரியங்களை எளிதில் சாதிக்க முடியவில்லை என்கிற நிலை இருக்கும்போது தேவனுடைய அருள் வாக்கை மாத்திரம் நம்பி ''கொடுங்கள்'' என்று கூறினால் யார் தருவார்கள்? அதனால்தானோ என்னவோ இவ்விஷயத்தில்

கற்பிக்கிறவர்கள், கற்றுக்கொள்பவர்கள், ஏழைகள், பணக்காரர்கள், மேலைநாட்டவர், கீழைநாட்டவர், பரம்பரை கிறிஸ்தவர்கள், புதிதாக கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டவர்கள் என்று பாகுபாடின்றி எல்லோரும் ''ஏகமனதும் ஏகசிந்தையும்'' உள்ளவர்களாகக் காட்சியளிக்கிறார்கள். அதாவது மூக்குச்செம்பைப் போன்று (Kettle) பெற்றுக் கொள்வதற்கு அகன்ற வாயும், கொடுப்பதற்குச் சிறிய மூக்கும் ஆக நடந்து கொள்ளுகிறார்கள்.

**6. கொடுப்பதிலுள்ள சில முட்டுக்கட்டைகள்:**

சில நேரங்களில் செய்யப்படுகிற காரியங்களின் தன்மை, அதை முன்னின்று நடத்துபவர்களின் பொறுப்புணர்ச்சி, நாணயம், நேர்மை இவைகளைப் பொறுத்தும் மக்களுடைய கொடுக்கும் தன்மைகள் விரிவடையவும் சுருங்கவும் செய்கின்றன. எடுத்துக்காட்டுக்கு இஸ்ரவேல் மக்களின் வனாந்தரப் பயணத்தின்போது நிகழ்ந்த ஒரு சம்பவம். யாத் *(35:5-9 36:5-7)*

இஸ்ரவேலரின் ஒப்பற்ற தலைவனும் வழிகாட்டியுமான மோசே முனிவர் தேவனுடைய கட்டளைப்படி ஆசரிப்புக் கூடாரம் ஒன்றை அமைக்க ஏற்பாடுகள் செய்தார். அதற்கு வேண்டிய பொன், வெள்ளி, உயர்தர மரச் சாமான்கள், விலையுயர்ந்த ஆடைகள் தயாரிக்கும் பட்டு, சணல் நார் போன்றவைகள், நவரத்னங்கள் அபிஷேகத்துக்கு வேண்டிய தைலங்கள் எல்லாம் தேவைப்படுவதாக மக்களுக்கு அறிவிப்புக் கொடுத்தார். இவ்வறிவிப்பைக் கேட்ட மாத்திரத்திலேயே எல்லா மக்களும் தங்களிடத்தில் இருந்த பொருட்களையெல்லாம் ஏராளமாகக் கொணர்ந்தனர். சிறிது நாட்களுக்குள் தேவைக்கும் அதிகமாகவே பொருள்கள் சேர்ந்துவிட்டபடியால் காணிக்கை கொண்டுவருவதை நிறுத்துங்கள் என்று மறுகட்டளையிட வேண்டியதாயிற்று. இது நடந்து சில ஆண்டுகளுக்குப் பிறகு அதே மக்களை ஆண்ட நியாயாதிபதிகளின் நாட்களில் தேவனுடைய ஊழியக்காரனான ஏலி தீர்க்கதரிசி நியாயாதிபதியாக இருந்த நாட்களில் கர்த்தருக்குக் காணிக்கை கொடுப்பதையே மக்கள் வெறுத்தனர் என்று வேதாகமம் கூறுகிறது காரணம் என்ன? ஏலியின் மக்கள் கர்த்தருடைய சந்நிதானத்தில் அக்கிரமங்கள் அநியாயங்கள் செய்து தெய்வ பயமின்றி மக்களுடைய பக்தி நெறிகளை அற்பமாய் மதித்து, துணிகரமான பாவங்களைச் செய்தார்கள். *1 சாமு 2:12-17.*

மறுபடியும் அதே மக்கள், சுமார் கி.மு. 700 வாக்கில் யூதா தேசத்தை அரசாண்ட எசேக்கியா என்னும் அரசன் காலத்தில், தாராளமாய் காணிக்கை கொடுத்தார்கள். கர்த்தருடைய சந்நிதானத்தில் மிதமிஞ்சித் தானியங்களும் பொருட்களும் சேர்ந்துவிட்டதால் புதிய களஞ்சியங்களைக் கட்டிச் சேமித்து வைக்க நேரிடுகிறது. காரணம் என்ன? எசேக்கியா அரசன் தெய்வ பயமுள்ளவனாக பல

ஙீதச் சீர்திருத்தங்களைச் செய்து நேர்மையாக அரசாண்டு மக்களுக்குப்-பல் நன்மைகளைச் செய்ததினால் மக்கள் உற்சாகமாகக் கொடுத்தார்கள். II நாளா 31:5-11.

கொஞ்ச காலம் சென்றது. அதே மக்கள் மீண்டும் சோர்வடைந்து கடவுளுடைய காரியங்களில் அக்கறையற்றவர்களாகி தேவனை மகிமைப்படுத்தும் காரியங்களில் ஈடுபாடு இல்லாமல் தேவ கோபத்தையும் தேடிக்கொண்டனர். இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் மறுபடியும் வழி காட்டுபவர்கள் சரியில்லை. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பொறுப்பற்று, சுய நலமிகளாய், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாய் தவறு செய்கிற மக்களைத் தட்டிக்கேட்காமல் நியாயத்தைப் புரட்டி தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாமல் போனதே காரணம்!(மல்கியா 2-ம் அதிகாரம்.)

இப்படிக் கூறுகிற நேரத்தில் எல்லா பாரத்தையும் ஊழியர்கள் தலைவர்கள் பேரில் போட்டுவிட்டு, மற்றவர்கள் தப்பித்துக் கொள்ளலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டு தங்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது. யாரும் போக்குச் சொல்வதற்கு இடமின்றி தேவனுடைய வார்த்தைகள் ஒவ்வொரு தனி மனிதனையும் தனித்தனியே பொறுப்பாக்கி வைத்திருக்கின்றன. ஆதலால் நம்மில் ''ஒவ்வொருவனும்'' தன்னைக்குறித்து தேவனுக்கு கணக்கு ஒப்புவிப்பான் ரோமர் 14:12. ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் II கொரி 5:10.

## 7. கிறிஸ்தவ ஈகையில் உள்ள எதிர்மறைச் சித்தாந்தம்:

கிறிஸ்தவ ஈகையை பரிசுத்த வேதாகமம் கூறுகிற முறையில் செயலாற்ற முடியாமல் தடுக்கிற மற்றொரு சிக்கல் என்னவெனில் அதில் அடங்கியுள்ள எதிர்மறைச் சித்தாந்தம். அதாவது இவ்வுலகில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ள முறைமையின் படி வாங்குவது ஆதாயம் அல்லது லாப ஸ்தானம் என்றும் கொடுப்பது இழப்பு அல்லது நஷ்டம் என்றும் அறிந்திருக்கிறோம். ஆனால் திருமறை இதற்கு எதிர்மறையாக ''வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதே பாக்கியம்'' அப் 20:35 என்று கூறுகிறது. இதை ஏற்றுக் கொண்டு செயல்படுவது எளிதான செயல் அல்ல. இயேசு கிறிஸ்துவின் போதனைகள் உலகத்து மாமேதைகள் என்று உலகம் புகழ்ந்துரைக்கிற ஒரு மகானின் போதனைகளைக் காட்டிலும் சிறந்தது. கருத்தாழம் மிக்கது என்று ஒப்புக்கொள்பவர்கள் கூட இந்த எதிர்மறை உபதேசத்தின் ரகசியங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறுகின்றனர். இதன் இரகசியங்களைப் புரிந்து கொள்வதற்குப் பிரகாசமான மனக்கண்கள் தேவை. எபே. 1:19. ஜென்ம சுபாவமான மனுஷன் தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான் அவைகள் அவனுக்குப் பைத்-

தியமாய்த் தோன்றும்'' 1 கொரி 2:14 என்பன போன்ற வசனங்கள் கூறுகிற உண்மைகளை நாம் முழுமனதோடே விசுவாசிக்க வேண்டும். அப்பொழுது தான் அதனைச் செயல்படுத்த முடியும். அதற்குரிய ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இறுதியாகக் கூறுமிடத்து, கிறிஸ்தவ ஈகையைப் பற்றி சரியாகப் புரிந்து கொண்டவர்கள் கிறிஸ்துவின் சகல உபதேசங்களையும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள் என்று துணிந்து கூறலாம்.

கிறிஸ்தவ ஈகை என்பது எவ்வளவு கொடுக்கிறோம் என்பதல்ல-எப்படிப்பட்ட மனநிலையோடு கொடுக்கிறோம் என்பதாகும். லூக்கா 21:1-4; 2 கொரி 8:1

கிறிஸ்தவ ஈகை மனிதரால் புகழப்படுவதற்காக அல்ல — தேவனிடத்திலிருந்து வெகுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மத் 6:1-4

கிறிஸ்தவ ஈகை என்பது கட்டாயமாயும் விசனமாயுமல்ல-உவந்த மனத்தோடு, உற்சாகத்தோடு கொடுப்பது 2 கொரி9:7

கிறிஸ்தவ ஈகை என்பது காணிக்கைத் தட்டிலோ, அல்லது பையிலோ வாரந்தோறும் நாம் இடுகின்ற சில நாணயங்களோடு முடிந்து விடுகின்ற பிரச்சினை அல்ல—வாழ்நாள் முழுவதும் பயத்தோடும் நடுக்கத்தோடும் நம்மை நாமே தேவனுக்கு ஒப்புக் கொடுக்கிற ஜீவ பலி. ரோமர் 12:1; 2 கொரி 8:5

கிறிஸ்தவ ஈகை என்பது நம்முடைய பணபலத்தாலும் செல்வாக்கினாலும் சபையைக் கைப்பற்றி அதிகாரம் செலுத்துவதற்கு பயன்படும் மந்திரக்கோல் அல்ல—இல்லாதவர்களையும், விதவைகளையும் அனாதைகளையும், பரிசுத்தவான்களையும் தாங்க உதவும் தேவனுடைய சமநிலைப் பிரமாணத்தின் திறவுக்கோல். 2 கொரி 8:5; யாக் 1:27; I தீமோ 5:16.

## கிறிஸ்தவ ஈகை

1 கொரி 16:2

**எப்பொழுது?**—வாரத்தின் முதல்நாள் தோறும்

**ஏன்?**—பதட்டம் இல்லாமல் (நான் வந்திருக்கும்போது சேர்க்குதல் இராதபடிக்கு)

**எவ்வளவு?**—தன் தன் வரவுக்குத் தக்கதாக
**என்ன கொடுப்பது?**—எதையாகிலும்

**E. Z. செல்வநாயகம்**

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH**—The Voice of Truth—Speakers: Reggle Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9:00 to 9:15 P. M.
Fridays-7:45 to 8:00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker: Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9:15 P. M.
Thursdays-9:00 to: 9:15 P. M.
Fridays-9:00 to 9:15 P. M.
Sundays-12:45 to 1:00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2:30 to 2:45 P. M.
Tuesdays-2:30 to 2;45 P. M.
Thursdays–2:30 to 2:45 P. M
Fridays-2:30 to 2:45 P. M.
Saturdays-2:30 to 2:45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker: P. R. Swamy.
All correspondence should be sent to Tne Way of Truth, Post Box 8405, Bangalore-550084.
Tuesdays-5:30 to 5:45 P. M.
Thursdays-6:45 to 7:00 P. M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker: P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala)
Tuesdoys,3:45 to 4:00 P. M.
Fridays-3:45 to 4:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondcnce Courses and Christian Literature are available in these different languages from tne addresses listed. Also the radio sermons are avaiiable in book form.

---

இந்த இதழ் தனிச் சுற்றுக்கு மட்டும்.

## வாசக அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு!

உங்களுக்கோ அல்லது நீங்கள் விலாசம் கொடுத்த யாருக்காவதோ இதழ்கள் வந்து சேரா விட்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்து கொண்டிருந்தாலும் தயவு செய்து எங்களுக்கு எழுதுங்கள்.

பிரதி மாதம் 20-ம் தேதியன்று இதழ் வெளி வருகிறது. 25-ந் தேதிக்குள் இதழ்கள் வந்து சேராவிட்டால் எங்களுக்கு ஒரு கார்டு மூலம் தெரிவியுங்கள். நன்றி!

ஆசிரியர்

Edited and Published by E. Z. Selvanayagam and Printed by Sri. Vela E. V. Arasamanickam. at Vela Printers, Erode-638 001. Phone : 74878

PRINTED MATTER

TO

BOOK-POST

If undelivered please return to :
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.